ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

यामाराद्धुं न गणितमिदं जीवितं वा धनं वा
यस्याःप्रीतिः मनसि कलिता ज्यायसी मोक्षतोऽपि ।
सैवेदेनीं वयसि चलिते संप्रहीणे च वित्ते
तूलायापि त्रिपुरहर मां मन्यते नैव भार्या ॥

யாதொரு ஸ்திரீயை ஆராதிக்க வேண்டி, மிகப்பாடு பட்டுத்தேடிய பொருளென்ன, சகலவித சுகங்களையுமனுபவிப்பதற்கு முக்கியஸாதனமான ஜீவனென்ன இவ்விரண்டுமே பெரிதாய்க் கருதப் படவில்லையோ; யாதொருவளுக்கு சந்தோஷத்தை யுண்டு பண்ணுவதே மோக்ஷத்தைக்காட்டிலும் சிறந்ததாக உள்ளத்தில் கொள்ளப்பட்டதோ இவ்விதம் ஆராதிக்கப்பெற்ற அந்த இல்லாளானவள் தற்காலம் செல்வம் குறைந்து வயது முதிர்ந்து வருந்தும் என்னை, ஹே திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமேச்வர! பஞ்சிற் கிணையாகக் கூட நினைக்கவில்லை.

ஓர் மனிதன், அக்ஞான மெனும் அந்தகாரத்தால், யௌவன பருவத்தில், சிற்றின்பசுகமே சிறந்ததென நினைத்து அறநெறி மாறி, பெண்டீரையேப் பெரிதாய்க் கொண்டு, தனக்கு நிகழும் எவ்வித இடுக்கண்களையும் லக்ஷியம் செய்யாது இல்லாளின் மனக்களிப்பே கைவல்யமெனக்கருதி, தன் பொருள், உயிர்,உடல் ஆகிய இம்மூன்றாலும் அவளை ஆராதித்தும், சிலநாட்கள் சென்ற பின்னர், மூப்பு நிறைந்து சரீரந்தளர்ந்து பொருளையும் இழந்து மிக வருந்துங்கால், முன் தன்னால் பரமப்பிரீதியுடனாராதிக்கப் பெற்ற மனையாளனவள் அற்பம் கூட கவனிக்காமல் அலக்ஷியம் செய்கின்றாள். "ஆகலால் ஓ பரமேச்வரா! இச்சமயத்தில் நீர்தான் என்னைக் காத்தருளவேண்டும்" என்றுவேண்டுகின்றான். இதனால், எம்மாதிரி ஆபத்துக்கள் நிகழ்ந்தாலும் நம்மைக்கைவிடாமல் ரக்ஷித்துக் காற்கின்றவர் கௌரீநாதனே என்றும் பார்யாபுத்திரர்கள் விஷயமாய் அவசியம் செலுத்த வேண்டிய சொற்ப காலத்தைத்தவிர, மற்றசமயங்களில் ஸ்ரீபகவானையே யுபாசித்து அவருடைய அனுக்கிரஹத்தைப் பெற வேண்டுமென நன்கு வெளியாகின்றது—

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-௵ வைகாசி-௴ ௧௧௨

கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி
பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகளவர்களின்
திவ்ய ஆதீனத்தின்கீழ் ஜம்புகேச்வரமென்
னும் திருவானைக்கோயில் க்ஷேத்திரத்தில்
ருதிரோத்காரி-௵ சித்திரை-௴
20, 21-ஆம் தேதிகளில்
நடைபெற்ற
வைதிக ஸநாதன

தர்ம ஸம்ரக்ஷண ஸம்மேளனம்.

1923-௵ மே-௴ 2, 3 ஆம் தேதிகளுக்குச் சரியான, ருதிரோத்காரி ௵- சித்திரை ௴- 20, 21-ஆம் தேதிகளில் நடைபெற்ற இவ்வைதிக ஸநாதன தர்மஸம்மேளனத்திற்கு பல் வேறிடங்களிலிருந்து அளவற்ற ஜனங்களும் அச்சபையினபிவிருத்தியைக் கோரும் பலகனவான்களும் விஜயம் செய்திருந்தனர். உத்ராதி மடத்திலிருந்து ஸ்ரீமான் P. பீமாசாரியாரவர்களும், திருவாடுதுறை யாதீனத்திலிருந்து அருணசலத்தம்பிரானவர்களும், ஸூரியனார் கோயிலாதீனத்திலிருந்து தக்ஷிணமூர்த்தித்தம்பிரானவர்களும் தர்மபுரமாதீனமிருந்து ஸ்ரீமான் கிருஷ்ணய்யரவர்களும் பிரதிநிதிகளாகவும், மற்றும் சித்தூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் "வேதாந்த விபூஷண சாஸ்திரரத்னகர" பிரும்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள், மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபால் "சாஸ்திர ரத்னகர" பிரும்மஸ்ரீ வெங்கடசுப்பாசாஸ்திரிகள், ஸ்ரீமடம் ஆஸ்தானவித்

வைதிக ஸநாதன தர்மஸம்ரக்ஷண ஸம்மேளனம், உடு

வான் வரகூர். ஸ்வா. வெங்கடராமசாஸ்திரிகள், பழமானேரி பிரும்மஸ்ரீ பஞ்சாபகேசசாஸ்திரிகள், மதுரை காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரும்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள், மதுரை ஸேதுபதி ஹைஸ்கூல் ஸமஸ்கிருத பண்டிட் பிரம்மஸ்ரீ M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள் முதலிய பல பண்டித சிகாமணிகளும் கூடியிருந்தனர் இவ்வாறு ஸநாதனதர்மத்தை நன்குநிலைநிறுத்த வேண்டுமென்று பத்தகங்கணர்களாய் நமது நாட்டிலுள்ள பல்வேறிடங்களிலிருந்தும் விஜயம் செய்திருந்த பண்டித கன தனவான்களுடைய குதூஹலத்துடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாய் விளங்காநிற்கும் ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்கள் ஸந்நிதியில் ஸநாதனதர்ம ஸம்மேளனமானது துவக்கப்பபட்டது. அச்சபைக்கு "வித்யாபிரசாரபிரவீணகுலபதி ஸ்ரீமான் ராவ்பகதூர். S. அப்புசாஸ்திரியாரவர்கள் அக்ராஸனம் வகிக்க வேண்டுமென்ற தீர்மானமானது மதராஸ் பிரும்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யரவர்களால் கொண்டுவரப்பெற்று தஞ்சை பிரும்மஸ்ரீ P.S. ராமஸ்வாமி அய்யரவர்களால் ஆமோதிக்கப் பெற்றதும், ஸர்வஜன அங்கீகாரத்துடன் ராவ்பகதூர் அப்புசாஸ்திரியாரவர்களே அக்ராஸனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீமான், சாஸ்திரியாரவர்கள் அக்ராசனம் வகித்தும் ஸ்ரீமடம் எஜெண்டு அவர்களால் காரிய த்தொந்திரவினால் இச்சபைக்கு வரமுடியாதவர்களும், இதன் முன்னேற்றத்தைப்பெரிதும் நாடினவர்களுமான ஸ்ரீமான் ராமதாஸ்பந்தலு, கர்ப்பூர் ஸ்ரீநிவாஸராவ், வாரணி ஆதிநாதர், ஸ்ரீனிவாஸ அயயங்காரவர்கள், மதராஸ். K. பாலசுப்பிரமணிய அய்யர், L. A.கோவிந்தராகவய்யர், C. P. ராமஸ்வாமி அய்யர், T. ரங்காசாரியார், T. R. ராமச்சந்திரய்யர் முதலிய பல பிரமுகர்களிடமிருந்தும் அஹோபிலம் மடம், நாங்கனேரி வானமாமலை மடம், ஞானப்பிரகாசமடம், பெரியகாஞ்சீபுரம் முகலிய தர்மஸ்தாபனங்களிலிருந்தும் கடிதங்களும், தந்திகளும் வாசிக்கப் பெற்ற பின்னர், கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

முதல்தீர்மானம்:—1922-ஆ௵த்தில், சென்னை சட்ட நிரூபண சபையில் பலத்த ஆட்சேபணைகளையும் பொருட்செய்யாது, வலுவிலே நிறைவேற்றப்பட்டுள்ள. இந்த ஹிந்துமதஸ்தாபன பரிபாலன மசோதாவானது, நமது இந்துஜனசங்கத்தின் ராஜவிசுவாஸத்திற்கு முக்கிய காரணமாயுள்ள "மதவிஷயங்களில் தலையிடாமல் மாத்தியஸ்தமாயிருப்பது" என்னும் அரசாங்கத்தார் உறுதிமொழிகளுக்கும், அரசியல் கொள்கைகளுக்கும் முற்றும் மாறுகவுள்ள காரணம் பற்றியும், மதசம்ரக்ஷணம் செய்கின்ற நம்மிந்து தேவஸ்தானங்களைம், தர்மஸ்தாபனங்களையும், அதுவேருடன் சீர்குலைத்து விடுமென்ற காரணம் பற்றியும், திருவானைக்கோயிலில்கூடியுள்ள இவ்விந்துஜன மஹாநாடானது இந்த மசோதாவை முழுமனதுடன் அழுத்தமாகக் கண்டிக்கின்றது.

2-வது தீர்மானம்:—தற்காலத்தி லமைக்கப் பட்டுள்ள சட்டசபைகளினங்கத்தினர்கள், ஒருவருக்கொருவர் வேறுபட்டதும், விரோதமானதுமான மதத்தினர்களாயும், வகுப்பினர்களாயும், தேசஸ்தர்களாயுமிருக்கும் காரணம் பற்றி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் உண்மையிலேயே அம்மதங்களில் பற்றுள்ளவர்கள் செய்யும் தீர்மானங்களாக மாட்டாதகையாலும், இத்தகைய விஷயங்களைப்பற்றித் தீர்மானிப் பதற்கு உண்மையான அம்மாதாபிமானிகளே யாத்தியமுள்ளவர்களாகையாலும், இப்பொழுதுள்ள இந்திய நிர்வாக சட்டசபைகள் (மாகாண சட்டசபைகளும் இம்பீரியல் சட்டசபையும்), மதத்தையபிவிருத்திசெய்யும் தர்மஸ்தாடனங்களை(முக்யமாக மடங்களை) பாதிக்கக் கூடிய இந்துமதஸ்தாபன பரிபாலன மசோதா போன்ற யாதொருவிதமான சட்டதிட்டமும் பிறப்பிப்பதற்கு அதிகாரிகளல்லரென்பது இம்மகாநாட்டின் உறுதியான அபிப்ராயம்.

3-வது தீர்மானம்:— பொதுவாக, உலகவாழ்க்கையைத் துறந்த சன்னியாசிகளே பொதுஜனங்களின் நன்மையைக் கருதி மதத்தலைமையை வகித்து மடாதிபதிகளாய் விளங்கு

கின்றபடியால், இம்மாதிரியான சட்டதிட்டங்களுக்கு அவர்களையுட்படுத்துவதானது, மதத்தலைவர்களென்ற அவர்கள் ஸ்தான மகிமையையும், கௌரவத்தையும், கடவுளின் பிரதிநிதியெனப் பல்லாயிரம் இந்து ஜனங்களால் போற்றப்படும் அவர்கள் மதிப்பையும் சீர் குலைத்து விடுமென்பது இந்த ஸநாதன தர்ம ஸம்மேளனத்தின் முக்ய அபிப்ராயம்.

இம்மூன்று தீர்மானங்களும் முறையே நிறைவேறிய பின்னர், ஸம்மேளனமானது மறுநாள் [3-5-23] காலை 7½ மணிக்கு ஒற்றிவைக்கப் பெற்று, சபைகலைந்தது. மறுதினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு மறுபடி சபை கூடியதும் அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

4-வது தீர்மானம்:— தற்காலம் ஆங்கிலேயரின் இந்திய அரசாட்சிக்கு அடிப்படையாயும் மூலதனமாயுமுள்ள மத விஷயங்களில் தலையிடுவதில்லை யென்னும் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியவர்களால் 1858-வருஷத்தில் கொடுக்கப்பட்ட உறுதி மொழிகளுக்கிணங்க, மதங்களையும மதஸம்பந்தமான தர்மஸ்தாபனங்களையும் கட்டுப் படுததக்கூடிய எவ்விதமானசட்டதிட்டங்களும் செய்யாமலிருப்பதே அரசியல் நீதியென்பது இம்மகா நாட்டின் முக்யமான கொள்கை.

5-வது தீர்மானம்:— இந்தியாவின் ராஜப்பிரதிநிதியான கவர்னர் ஜனரலவர்கள் இந்த ஹிந்து மத ஸ்தாபன பரிபாலன மசோதாவை இந்தியாகவர்மெண்டின் ஆலோசனைக்கு ஒற்றி வைத்ததற்காக, சபையானது அவர்களுக்கு நன்றி பாராட்டுவதுடன், இம்மசோதா சட்டமாக நிறை வேறுவண்ணம் தடுத்துவிடும்படிக்கும் மிகவும் வேண்டிக் கொள்ளுகின்றது.

6-வது தீர்மானம்:—இத்தகைய மசோதாவினால் நேரிடக்கூடிய பெருந்துன்பங்களை சென்னை கவர்னருக்கும், இந்திய ராஜப்பிரதிநிதி யவர்களுக்கும் தெளிவுற எடுத்துறைப்பதற்கும் அது சட்டமாகாவண்ணம் தடுத்து விடும்படி அவர்களை வேண்

டிக்கொள்வதற்கும் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற உடுப்பி கான்பிரஸின் தீர்மானத்தை இம்மகாநாடு ஆமோதிப்பது மன்றி தாங்களும் அவ்வாறே பிரம்மஸ்ரீ "வித்யாப்பிரசாரப்பிரவீண குலபதி" ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரிகளவர்களையும், மதுரை ஹைகோர்ட் வக்கில் பிரும்மஸ்ரீ R. கணபதி அய்யர் B. A B. L. அவர்களையும் தேர்ந்தெடுத்து இம்மாதம் 5 ஆம் தேதியில் சென்னை கவர்னவர்கள் சமுகத்திற்கு அனுப்புவதாகத் தீர்மானித்திருக்கின்றது.

7-வது தீர்மானம்;— (a) எல்லாநகர்களிலும் கிராமங்களிலும் பொதுக் கூட்டங்கள் கூட்டி இவ்விந்து மதஸ்தாபன பரிபாலன மசோதாவைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்வதற்கும், அத்தகைய தீர்மானங்களை தந்திகள் மூலமாகவும் மனுக்கள் மூலமாகவும் சென்னை கவர்னவரவர்களுக்கும் ராஜப்பிரதிநிதி யவர்களுக்கும் அனுப்பும்படிக்கும், தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

[b] வைதிக ஸநாதன தர்மாபிமானியாகிற ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் ஐந்து கிராமங்களிலாவது இம்மாதிரியானபொதுக் கூட்டங்களை கூட்டுவதற்கு தக்க முயற்சிகள் செய்யவேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

8-வது தீர்மானம்:— (a) ஏனைய இந்து ஜனங்களுடைய இவ்வளவு பலத்த கண்டனங்களையும் பொருட் செய்யாது, இம்மசோதாவானது சட்டமாக நிறைவேற்றப் படுமேயாகில், அஃது அமுலுக்குவாராமலிருக்கும் படியான ஏற்பாடுகள் செய்வதற்கு உடனே ஓர் இரண்டாவது மகாநாடு கூட்டப்படும்.

[b] இந்தகைய இரண்டாவது மகாநாட்டை கூட்டும் பொருப்பானது ஸ்ரீமான் N. நடேசய்யர், T. K. பாலசுப்பிரமணிய அய்யர், டாக்டர் N. சுப்பிரமணிய அய்யர், R. கணபதி அய்யர், M. S. சேஷய்யங்கார் முதலிய இவ் வங்கத்தினர்களடங்கிய ஓர் கமிட்டியின் வசம் ஒப்புவிக்கப்படுகின்றது.

மேற்சொல்லப் பட்ட 8-வது தீர்மானத்தின் முதற் பகுதியில் [VIII Resolution (a)] "இந்த மசோதாவானது சட்டமாக நிறைவேற்றப்படுமாகில்" என்பதற்குப் பின்பு "அப்பொழுது கூடும் இரண்டாவது மகாநாடானது தீர்மானிக்கும் வண்ணம் ஒற்றுமையாமை இயக்கத்தை யனுஷ்டித்து அத்தகைய சட்டத்தை உபயோகமற்றதாகச் செய்தற்குறிய முயற்சிகள் செய்ய வேண்டும்" என்ற பதங்கள் சேர்க்க வேண்டுமென ஓர் சீர்த்திருத்தம் (Amendment) கொண்டு வரப்பட்டது. அது ஆமோதிக்கப்பெற்றதும் பலர்கள் அச் சீர்த்திருத்தத்தை யாக்ஷேபித்துப் பேசினார்கள். உடனே அசல் தீர்மானம்கொண்டு வந்தவரான ஸ்ரீமான் பெங்களூர் S S செட்லர் [S S Setlur] அவர்களும் சீதிருத்தத்தை சில வார்த்தைகளால் கண்டித்தார்கள். பின்னர் அக்ராஸனாதிபதியவர்களும் எழுந்திருந்து தீர்மானத்தையும் சீர்திருத்தத்தையும் நன்கு விளக்கினார்கள். ஆனால் அமெண்ட்மெண்டிற்கு [Amendment] ச்சாதகமாக 12 நபர்களே ஓட்டுக்கொடுத்தபடியால் அசல் தீர்மானமே இறுதியில் உறுதியாக அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றது.

9-வது தீர்மானம்:—மேற் செய்யப்பட்ட தீர்மானங்களை சென்னை கவர்னரவர்களுக்கும், இந்திய ராஜப் பிரதிநிதியவர்களுக்கும், சீமையிலுள்ள இந்தியா மந்திரியவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும், இந்திய விஷயங்களில் பற்றுதலுள்ள பார்லிமெண்டு மெம்பர்களுக்கும், சமீபத்தில் சென்னையில் நடைபெறும் பொதுஜனக் கூட்டத்தின் அக்ராஸனாதிபதி யவர்களுக்கும் அனுப்பவேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

10-வது தீர்மானம்:— [a] புராதனமான நமது குருகுலவாஸத்தின் வழியே பின் பற்றும் "விச்வ வித்யா பீடமொன்று அவசியம் நியமனம் செய்யப் பட வேண்டுமென்று இச்சம்மேளனம் அபிப்பிராயப் படுகின்றது.

(b) ஞான க்ஷேத்திரமாகிய ஜம்புகேச்வரத்தையே இந்த விச்வ வித்யா பீடஸ்தாபனத்திற்குற்றஸ்தானமாக் கருதுவ

டன், இச்சபையானது கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிக ளவர்களையும் மற்றுமுள்ள மடாதிபதிகளையும் இத்தகைய வித்யாபீடஸ்தாபனத்துக் குரிய மார்க்கங்களையும் நன்கு புகட்டி அதற்கு வேண்டிய சாதனங்களையும் செய்தருள வேண்டுமாய் வேண்டிக் கொள்கின்றது.

11-வது தர்மானம்:— வைதிக ஸநாதன தர்மாபிவிருத்தியினிமித்தம் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியும் அவரவர்கள் ஜில்லாவில் அதன் முன்னேற்றத்திற்காகப் பாடு படும் சபைகளுடனும், தர்மஸ்தாபனங்களுடனும் ஒற்றுழைக்க வேண்டியும் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் ஆதீனத்தின் கீழ் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஓர் பஞ்சாயத்துக் கமிட்டியானது நியமிக்கப் படவேண்டுமென்று இம்மகா நாடு தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானங்கள் இவ்வாறு முடிவுபெற்றதும் அக்ராஸனாதிபதியவர்கள் எழுந்திருந்து முடிவுரையாகச்சில வார்த்தைகள் பேசிய பின்னர், மதராஸ் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யரவர்களால் அக்ராஸனாதிபதியவர்களுக்கும் மற்றுமுள்ள சபையோர்களுக்கும் வந்தனோபசாரங்கள் செலுத்தப் பட்டு வெகு கோலாகலத்துடன் அங்கீகரிக்கப் பெற்றதும், நமது ஸநாதன தர்ம சம்மேளமானது, தன்னால் செய்யப்பட்ட தீர்மானங்களை ஜகத்குரு அவர்கள் சரணகமலங்களில் சமர்ப்பிப்பதற்கும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளும் ஞான ஒளியைப்புகட்டும் இனிய வசனங்களைக்கேட்பதற்கும் மாலை நான்கு மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

மாலை நான்குமணி சுமாருக்குத் திரும்பவும் சபை கூடியதும், ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரி ஸ்வாமிகளவர்கள், மிக அரிதானதும், கேட்போர் மனதைக் கவரத்தக்கதும், ஞான மார்க்கத்தை நன்கு புகட்டுவதாயுமுள்ள ஓர் அழகிய உபன்னியாசம் செய்தார்கள். கடைசியில் தெய்வ வணக்கத்துடன் ஸம்மேளனமானது ஸ்ரீ ஜகத்குரு பரமாசாரியாரவர்களின் அனுக்ரக விசேஷத்தால்மிகவும் சிறப்பாய் முடிவு பெற்றது.

புராணக் கதைகளும் அவற்றின் லக்ஷியங்களும்

(உளஉ-வது பக்கத்தொடர்ச்சி.)

(வித்யாவிஹாரிணியிலிருந்து)

ஜனகரிஷி "ஆகட்டும். ஆனால் குழந்தாய் நீ வந்த களைப்பாறியபின் இந்த சங்கதியைப் பற்றிப் பேசலாம்," என்று சொல்லிச்சிறுவனுக்குத் திண்டிமுதலிய சகல உபசாரங்களும் குறைவின்றி நடக்க உத்தரவளித்தார். இப்படிக் கொஞ்சநாளாகப் பிறகு சிறுவன் ராஜரிஷியைக் கண்டு வணங்கி, "நான் வந்த காரியத்தைச் சற்று கவனிக்கவேண்டு" மென்றான். ஜனகரும் அதைக்கேட்டு, "ஓகோ எனக்கு மறந்துபோய்விட்டது. ஆனாலும் பாவாயில்லை. இதோ இந்த அறைக்குள் போ. நானும்வருகிறேனென்று சொல்லிப்போனார். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் மறுபடி வந்து அறைக்குட் பிரவேசித்துத் தன் கையிலிருந்த ஒரு பணப்பையை முன்னிட்டு உட்கார்ந்து பணத்தைக் கொட்டி எண்ணினார். அதில் நூறு பொன்னிருந்தது. பிறகு அதைக்கட்டி வைத்துவிட்டு, இதோ வருகிறேன் என்று சொல்லிப்போய் மறுபடி வந்து பையையவிழ்த்துப் பொன்னை யெண்ணிப்பார்க்கையில் இரண்டு குறைந்தது.

உடனே மகா ராஜா சிறுவனைப் பார்த்து, "இதென்ன இரண்டு பொன் குறைகிறது, இந்த அறையில் உன்னைத் தவிர வேறு யாருமிருக்கவில்லை. ஆதலால் நீதான் இதைத் திருடியிருக்கவேண்டும். நான் ராஜாவாதலால், துஷ்டரைத் தண்டிக்க வேண்டியது என் பாரம். இப்பொழுது உன் கைகளிரண்டையும் மணிக்கட்டுகளுடன் தறித்து விடப்போகிறேன்," என்றார்.

இதைக் கேட்டதும் சிறுவன் திடுக்கிட்டு, "ஐயோ, நான் ஒரு பாபமுமறியேனே. எனக்கு இப்படி ஆபத்தும் அபகீர்த்

தியும் வந்து விட்டதே," என்று பலவிதமாகப் புலம்பி, "ஐயா சத்திரபதி, இதற்குப் பரிகார மொன்றுமில்லையா ?" என்று கேட்டான். ஜனகரும் அவனைப் பார்த்து, "சிறுவனே, இதற்கு ஒரே பரிகாரம் தான். அதோ இருக்கிற தாவியில் போய்க் கையிரண்டையும் சேர்த்து நிரம்பத் தண்ணீரை யெடுத்து இங்கு வந்து இறைத்து விடவேண்டும். அந்த நீரில் ஒரு சொட்டு வழியில் சொட்டினால், நீயே குற்றவாளி யென்றேற்படும்," என்றார். சிறுவனும் வெகு பயபக்தியுடன் போய் தாவருகில் நின்று சருவாந்தரியாமியான பகவானை மனதில் ஸ்மரித்து, "ஓ ஆபத்பாந்தவா, அனாதரக்ஷகா, நான் ஒருபாயமுமறியாமலிருப்பது தமக்குத்தெரியுமாதலால், இக்கார்யத்தில் எனக்கு ஒரு குறைவும் வாராமல் பார்த்துக்கொள்வது தமது கடமை. என் கருமம்போல் எனக்காகட்டு" யென்று சொல்லிக்கொண்டு, உலகத்திலுள்ள சகலவியாபாரங்களையும்மறந்து, பகவானுடைய பாதாரவிந்தங்களையே ததேகத்தியானமாய் வகித்து நீரையேந்தி வந்து மகா ராஜாசன்னிதியிலிறைத்தான். உடனே ஜனக ராஜன் கைகொட்டிச் சபாசென்று, மெச்சி "ஓ சிறுவனே, நீ இப்பொழுது சுத்தனாகிவிட்டாய். பகவான் உன்னைப் பரிசுத்தனாக்கியிருக்கிறார். அவருடைய கிருபைக்கு நீ பாத்திரவானாகியதால், இனிச் சுகமாகப் போய் வாழ்வாயாக. நான் உன் மேல் பழி சுமத்தியது அக்ரமம் தான். அதை மறந்து விடுவாயாக," என்றார். தலை தப்பியதற்க நிஷ்கரிஷையானதும், சிறுவனுக்குத் தன்மேல் வீண்பழி சுமத்திய ராஜன் மேல் கோபம் இவ்வள வென்றில்லாமல் பொங்கி, "ஓ ராஜனே என் மேல் அநீதமாகப் பாபத்தை யேற்றிய உன்னைச் சபிக்க வேண்டுகிறேன், அப்படியே செய்யட்டுமா ?" என ஜனகரும் வெகு ஆதரவாய், "அப்பா, அப்படியே செய்துகொள். மறுபடி தாவண்டைபோய் முன் போலவே இரண்டு கைகளிலும் நீரை யேந்தி வந்து, என் தலைமேல் அதை யிறைத்து வேண்டியபடி சாபமிட்டுப் போ, என்றார். சிறுவன் அப்படியே செய்வதென்று போய்த் தண்ணீரை இருகையிலும் ஏந்தித்திரும்பினான். தண்ணீர் இறைந் துவிட்டது. லக்ஷம் தடவை பிரயத்தனப் பட்டும் முடியவில்லை.

சிறுவன் திகைத்து நிற்பதை ராஜன் கண்டு புன்னகையுடன், "குழந்தாய், ஏன் நிற்கிறாய்? உன்னாலாகவில்லை. இப்பொழுது ரகசிய மறி. முந்தி உனக்கு ஆபத்து வந்திருக்கையில், உன் மனது இப்பிரபஞ்சத்திலுள்ள சகலத்தையும் மறந்து, பரமாத்மாவை மட்டுமே தியானித்து நின்றது. அந்த நிலைதான் உபநிஷத்தில் சொல்லியது. அதைத்தான் நீ கேட்க வந்தது. மற்றதோ, பிறருக்குக் கேடு விளைவிக்க நினைத்தது. அக்காரியத்தில் பரமாத்மா சம்பந்தப்படுவதில்லை யென்றறி. ஏனெனில் அவர் மங்களமூர்த்தி யென்று உனக்குத் தெரியவேண்டும் என்றாராம். சிறுவனும் இதைக் கேட்டதும் ஞானவானாகி ராஜரிஷியை நமஸ்கரித்துப் போய், ஞானம், சீலம் இரண்டும் வர்த்தித்து, நாளாவர்த்தியில் பேரும் புகழும் பெற்றான்.

ஸ்ரீகிருஷ்ண பகவானும் யுதிஷ்டிரனும்.

"ஓதலினன்றே வேதியர்க் கொழுக்கம்," என்று ஔவையார் சொல்லியதை நம்மவர் விசேஷமாகக் கவனிப்பதில்லை. என்றாலும் அதைச் சற்று கவனிப்பவருக்கு அதிலுள்ள பெரும்பொருள் சுலபமாக விளங்கும். தென்னிந்தியாவில் பலவிடங்களில் 'வேதியர்' குடியேறியது சேர சோழ பாண்டியராகிய வேந்தருடையவும், அவருடைய அதீனஸ்தராகிய சாமந்தர்களுடையவும் வேண்டுகோளுக்கிசைந்து, அவரால் சருவமான்ய முதலிய வெகுமானங்கள் பலமாகக்கிடைக்கப் பெற்று, அக்கிரகாரங்களிலமர்ந்து சுகப்பட்ட வகையிலாதலால், இவ்வாறு அமர்ந்த வேதியருக்கு வெகு சீக்கிரத்தில் ஓதலாகிய பெருமையினால் ஒழுக்கம் குன்றித் தலை கீழாக விழுந்ததைப் பலர் பார்த்துச் சகியாமல், வயிற்றெரிச்சல் கொண்டதையே ஔவையார் மேற்கூறிய வாக்யத்தில் ரிஜிஸ்தர் செய்து விட்டதாக நமக்குக் காணுகிறது. ஆனால் இவ்விதமான கல்வி, பக்தி முதலியவற்றாலுண்டாகும் செருக்கு வெகு புராதனமாக வந்திருக்க வேண்டுமென்று பின் வரும் கதையால் நாம் தெரிந்து கொள்ளலாம். கதையின் கருத்து இது. நமக்குக் கல்வி ஆ

சாரம் முதலிய பல நற்குணங்களிருந்தாலும், அகங்காரம், கர்வம் முதலிய துர்லக்ஷணங்கள் நம்மை விடாதிருக்கும் வரை அந்நற்குணங்களைப் பீடிக்கும் கிரகணமும் விடாது தொடருமென்பதும், மனது மட்டும் ஈசுவரனிடத்தில் லயித்திருந்தால், அதையே அவர் சம்மதிக்கிறு ரென்பதுமாம். ஸ்ரீபாகவதத்திலும் 'அவரவருக் கேற்பட்ட தருமத்தைப் பரிபாலித்து வருவதே ஸ்ரீபகவானுக்கேற்ற ஆராதனம்,' என்று வருணித்திருக்கிறது. கதை வருமாறு:—

"யுதிஷ்டிரமகாராஜர் ராஜசூயயாகம் செய்து வருகையில் ஒரு நாள் வாத்யகோஷங்களொன்றும் ஒலிக்காமல் நின்று விட்டன. ஒரு காரியமும் மங்கள வாத்யமில்லாமல் நடப்பதற்கில்லை. ஆதலால் யுதிஷ்டிரன் ஸ்ரீ கிருஷ்ணபகவானை யடுத்து இதற்குக் காரணமும் பரிகாரமும் கேட்க, அவரும் யோஜித்து, இம்மாதிரியான சம்பவங்கள் துற்குறிகளென்றே எண்ணவேண்டும். இச்சபையில் நல்ல பக்தனொருவனில்லாத தோஷத்தால் இப்படியாயிற்று," என்றார். யுதிஷ்டிரனும் அதிசயித்து, "ஓ கிருஷ்ணா, இது என்ன விபரீதம். இத்தனை பெயர் முனிவரர், ராஜ ரிஷிகள், ப்ரம்ம ரிஷிகள், கூடியிருக்கும் சபையில் ஒரு பக்தனில்லை யென்கிறீரே," என, அவரும், "அது வாஸ்தவம். ஆதலால் நிஜ பக்தனாக வொருவனைக் கண்டு பிடியுங்கள் என்றாராம். பிறகு நிஜபக்தனிருக்குமிடமறிந்து பாண்டவரைவரும் போய், அவன் அஸ்தினாபுரப் பரச்சேரியிலுள்ள ஓர் ஏழைக் கிழவனென்று கண்டு, பீமன் அவனைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு யாக மண்டபத்தில் வந்திறக்க, உடனே வாத்தியங்கள் பழயபடி முழங்கி யாகம் நடந்ததாகக் கதை.

இந்த இரண்டு கதைகளிலும் அதிசயோக்தி கொஞ்சம் மலிந்து கண்டாலும், சாரத்தை மட்டும் விவேகிகள் கிரகித்துச் சக்கையைப் பரிகரித்துச் சுகமடைய வேண்டுகிறோம்.

இன்பம்.

(உகூஎ-வது பக்கத் தொடர்ச்சி.)

अर्थो हि कन्या परकीय एव तामद्य संप्रेष्य परिग्रहीतुः ।
जातो ममायं विशदः प्रकामं प्रत्यर्पितन्यास इवान्तरात्मा ॥

என்று காளிதாஸர் கூறியவண்ணம் ஒவ்வொருவரும் கன்னிகா ரூபமான தன்னுடைய தனத்தை அன்னியரின் பொருளெனக் கருதிப் பெண்களை வரர்களிடம் சேர்ப்பிவிக்க வழியைத்தேடு கின்றனர். இவ்விதம் பாடுபட்டுத் தேடிவைத்த பணங்களை வரர்களிடம் கல்யாணமானுற்போதுமென்று முதலில் ஸமர்ப் பிப்பதுமன்றி அவர்களுக்கு, இசைந்தவாறு "சீர்" என்று சொல் லக்கூடிய பட்சண வகைகளையும் செழிப்பாகப்பயந்து செய்ய வேண்டுமாம். ஐயா! இத்துடன் போதாதா! பெண்கள் ருதுவா னதும் வரர்கள் சாந்திசெய்வது மிகவும் துர்லபமாய் இருக்கி ன்றது. வரர்களினிஷ்டத்தைப் பூர்த்திசெய்யாவிடில் வரர்கள் சாந்திசெய்வது கிடையாது. அதற்குமேதாவது வழிபண்ணி சாந்தியை நடத்திவைத்த கொஞ்சதினத்திற்குள் தன் மனைவி யை நோக்கி நீ நின்பிறந்த வீட்டிலிருந்து "அதைக்கொண்டுவா இதைக்கொண்டுவா" வென்று அதட்டுகின்றனர். அதற்கு இல் லாள் இணங்காவிடில் திட்டவும், குட்டவும், அடிக்கவும் செய் வார்கள். இவ்விதமாக இல்லாள் திட்டுக்கேட்டுக் குட்டுப்பட்டு குறுகிய முகவிலாஸத்துடன் அழுதுகொண்டுதான் பிறந்தவீடு போய்ச் சேர்வதுண்டு. பெற்றோர்களும் இக்கொடுமையான கண்டிராவியை ஸஹிக்காமல் இல்லை இல்லை என்று ஒளித்து வைத்த பணங்களையும் அவ்வமயம் கொடுத்துவிடுகின்றனர். கடைசியாகப் பெற்றோர்களும்,

दारिद्र्याद्ध्रियमेति ह्रीपरिगतः प्रभ्रश्यते तेजसः
निस्तेजाः परिभूयते परिभवान्निर्वेदमापद्यते ।

निर्विण्णश्शुचमेति शोकपिहितो बुद्ध्या परित्यज्यते
निर्बुद्धिः क्षयमेत्यहो निधनता सर्वापदामास्पदम् ॥
दारिद्र्यान्मरणाद्वा मरणं मम रोचते न दारिद्र्यम् ।
अल्पक्लेशं मरणं दारिद्र्यमनन्तकं दुःखम् ॥

என்ற இவ்விரண்டு ச்லோகங்களாலும் சூத்ரகரென்றகவி கூறிய வண்ணம் தாரித்திரியத்தால் லஜ்ஜையையும் லஜ்ஜையால் சோபையில்லாமையையும் அதனுல் அவமானத்தையும் அவமானத்தால் ஒன்றிலும் ரஸியாத குணத்தையும், அதனுல் துக்கத்தையும் துக்கத்தினுல் புத்தியில்லாமையையும் அதனுல் க்ஷயத்தையுமடைந்து உயிரைத்துறக்க வழிதேடுகின்றனர். பிறந்த குழந்தைகள்என்னஅழுதாலும் கொடுக்கசக்தியற்ற சிலரோவெனின் தன் வீட்டிலேயே பெண்ணை வைத்துக்கொள்ளுகின்றனர். அந்தோ! இஃதென்ன விபரீதம். தள்ளாத வயஸில் ஆசையைமாத்திரம் ஒழிக்காத கிழவர்களின் கொடுஞ்செய்தியை பார்மின், ஒருவரின் ஸொத்துக்களை மற்ருெருவனுக்கென்று கோர்ட்டில்பொய் சாக்ஷி சொல்லி ஸாதித்து பின் ஏராளமான பணங்களை மிகத் தாராளமாக சிலவழித்து இடையில் விரோதம் நேர்ந்ததால் முன் தீர்ப்பானதையும் லட்சியம் செய்யாது தாளுகவே அதை மாறுதலாக வாதித்து கோர்ட்டில் ஜயம்பெற்று வருகின்றனர். இது மிகவும் வியக்கத் தக்கதே. அன்றியும் பொழுதுபோகாமல் வீட்டில் சலசலவென்று சலம்பிக்கொண்டிருக்கும் கிழவர்கள் தம்மிடமிருந்து பணத்தைக் கொள்வதற்காக மாத்திரம் தம்மிடம் பயந்துநடக்கும் புத்ர பௌத்ரர்களை நோக்கி "உன்னுடைய கல்யாணகாலத்தில் உனக்குப் பெண்கொடுத்த வீட்டிருந்து ஊராரை ஒப்பி நமக்குப்பணம் ஒன்றும் கொடுக்கவில்லையே. அவர்கள் செய்துள்ள சீர்வகைகளெல்லாம் உலகத்தார் என்னைப் பரிஹஸிக்கும்படி இருந்தன. நானும் ஏதோ போகட்டுமென்றிருந்தேன். கல்யாணம் கழிந்ததும் ஆருமாஸம் நடக்கவில்லையா ? அதன் பின் ருதுஸ்நானம் நடைபெறவில்லையா ?

இவ்விசேஷத்தைத் தொடர்ந்து ருதுசாந்தியும் நடந்ததே. இவைகளுக்காக என்ன சீர் செய்திருக்கின்றனர். இவை எல்லாம் நினைக்குங்கால் என் மனது பரிதபிக்கின்றது. இங்ஙனமிருக்க நீ உன் பார்யையுடன் கூடுவது சரியா ? அண்டை வீட்டுக் கேசவன் பிள்ளை மாதவனைப் பார்த்தாவது உனக்கு புத்திவரக்கூடாதா ? "குதிரை இருப்பறியும், கொண்ட பெண் சாதி குணமறிவாளே "ன்னு முலகவாய்மையை நீ கேட்டதில்லையா ? அங்ஙனமிருக்க நீ நின்மனைவிக்கு இடங்கொடுத்தால் அவள் நின்தலைமீது ஏறமாட்டாளா ? இனியாவது கவனமாயிரு. அன்றேல் வீட்டைவிட்டு வெளியே செல் "என்று கேவலம் தின்பண்டங்களினாசையினால் நல்வரின் வசனங்களைப் போல் நடிக்கும் வார்த்தைகளைக் கூறும்கால் அவைகள் எவ்வித பரிதாபத்தை விளைவிக்கின்றன. அந்தோ! இஃதென்னவிந்தை!

परस्परप्राप्तिनिराशयोर्वरं शरीरनाशोऽपि समानुरागयोः ।

என்றோர் கவி கூறியவண்ணம் ஸ்திரீபுமான்களிருவரும் பரஸ்பரம் பூவும் மணமும்போல காதலுற்று அக்காதலின் பலமான சேர்க்கையை அடையாவிடில் உயிரைத்துறப்பது நலமன்றோ. இவ்விதம் தன்னுடைய வம்சத்திற்குத் தானே கோடரியாக இருந்து கொடுமையை விளைப்போருக்கு எங்ஙனம் மோக்ஷம் சம்பவிக்கும்? அன்றியும் "கடந்துளோர்களும் கடப்பரோ மக்கண்மேற் காதல்" என்ற உலகவாய்மைப்படி ஒவ்வொருவரும் தம் தம் குழந்தைகளை இளமைப் பருவத்தில் வெயில் படாது இரக்ஷிக்கின்றனர். அதே குழந்தைகள் தமது காளைப்பருவத்தில் ஸம்பாதிக்கக்கூடிய வயது வந்ததும் தள்ளாதவயதிலிருக்கும் அன்னை தந்தைகளிடம் நேரே முகம் கொடுத்துப் பேசுவதில்லை. அதுகொண்டே " பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு " என்னும் உலகவாய்மையும் வழங்கிவருகின்றது இவ்விதமுள்ள தம்புத்திரர்களைப்பார்த்தாவது ஸம்ஸாரத்திலிருக்கும் மாசாபாசத்தை விலக்கித் துறவறத்தை அனுஷ்டிக்கலாகாதா? மறுபடியும் தன் பேரனுக்குக் கல்யாணம் நடக்கவேண்டுமென்

றும் அதன்பின் அவனுக்கும் குழந்தைகள் பிறக்கவேண்டுமெனவும் கருதுகிறார்கள்.

"विकारहेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः"

என்றோர் கவி கூறியவண்ணம் விகாரஹேதுவான பதார்த்தங்கள் தன் முன் இருக்குங்கால் எவர்களின் சித்தமானது விகாரத்தை அடைகிறதில்லையோ அவர்களன்றோ தீரர்கள். இல்லறத்திலுள்ள விகாரங்களோ பலவுள. அவைகளுக்கிரையாகாதவர் அரிதிலுமரிதே. ஆயினும் நாம் ஒவ்வொருவரும் இவ்வித விகாரங்களை விலக்கி நன்னோக்கத்துடன் இல்லறத்திலிருந்துகொண்டே சுருதிகளின் கருத்தையனுஸரித்த மிஸ்டர் டால்ஸ்டாய் என்பவரின் "(1) ஒருவரையும் கொல்லேல், (2) காமத்திற்கிடங்கொடேல், (3) ஆணையிட்டுக்கூறேல், (4) ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யேல், (5) மன்னுயிரைத் தன்னுயிர்போல் போற்றல்" என்ற இவ்வைந்து வாக்கியங்களையும் விரதமாகக்கொண்டு அனுஷ்டித்துவரின் இல்லறமே பரமபதத்தை அளிக்குமென்பதில் சற்றேனும் ஐயமில்லை.

இனி அதமமான இன்பத்தைப் பற்றிக் கொஞ்சம் கூறுவோம்:

पानं सुरायाः कनकादिभूषा स्तेयं तथा गोद्विजमारणं च।
गुरोश्च तल्पे गमनं च कृत्वा सर्वेऽपि मूढा निरयं व्रजन्ति ॥

(இ. ள்.) கட்குடித்தல், சுவர்ணம் முதலிய ஆபரணங்களைத் திருடுதல், பசுக்கள், வேதியர் முதலிய ஜீவராசிகளைக் கொல்லுதல், தன் ஆசிரியரின் மனைவி முதலிய புணரக்கூடாத மங்கையரைப்புணருதல் முதலிய இதுபோன்ற ஏனைய பாபத்தொழிலைச் செய்யும் யாவரும் நரகத்தை அடைகிறார்கள்.

[இன்னும் வரும்.]

K. M. சுப்பிரமணியசாஸ்திரிகள்